## முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய சுற்றுலாத் துறையில் – முதல்வரின் சீரிய திட்டங்களால்

# ஓராண்டில் மட்டும் 29 கோடி பேர் தமிழ்நாட்டிற்கு ‘சுற்றுலா வெற்றிப் பயணம்’!

## தமிழ்நாடு சுற்றுலாத்துறை விருது வழங்கும் விழாவில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

**சென்னை, நவ.21 - முத்தமிழறிஞர் கலைஞர் உருவாக்கிய சுற்றுலாத்துறையில் முதல்வரின் சீரிய திட்டங்களால் ஓராண்டில் மட்டும் 29 கோடி பேர் தமிழ்நாட்டிற்கு சுற்றுலா, வெற்றிப் பயணம் மேற்கொண்டுள்ளனர் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

நேற்று முன்தினம் (19.11.2024) சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற சுற்றுலாத் துறை விருதுகள் வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றினார். அவ்வுரை வருமாறு:-

1971ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது. இன்று சுற்றுலாத்துறை அசாதாரண வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. அந்த வளர்ச்சி என்பது தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறது. சுற்றுலாத்துறையின் சார்பில் பயணத் திட்டங்கள் வகுக்கப்படுகிறது. பல்வேறு ஹோட்டல்கள் தங்கும் விடுதிகள் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அமுதம் என்ற பெயரால் விடுதிகள் இயங்கிக்கொண்டிருக்கிறது. படகு குழாம்கள் இயங்கிக்கொண்டிருக்கிறது. பல்வேறு சேவைகள் சுற்றுலாத்துறை யின் சார்பில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நம்முடைய இராஜேந்திரன் அவர்கள் சுற்றுலாத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்றப் பிறகு நடைபெற்றுக்கொண்டிருக்கிற முதல் நிகழ்ச்சி, முத்தாய்ப்பான நிகழ்ச்சி. ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். Well Begning of Done என்று எதையும் முறையாகச் செய்தால் அது பாதி முடிவடைந்ததற்குச் சமம். அவர் பொறுப்பேற்றப் பிறகு நடைபெறுகிற முதல் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக, பிரம்மாண்டமாக, மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நிச்சயம் அவர் இந்தத் துறையில் நினைத்ததை பெரும் வெற்றியை ஈட்டித் தரும் என்று நான் கருதுகிறேன்.

அமைச்சர் ராஜேந்திரன் பொறுப்பேற்றதற்குபிறகு சற்றொப்ப இரண்டு மாதக் கால இடைவெளியில் சற்றொப்ப 30 சுற்றுலாத் தலங்களைப் போய் பார்த்து நேரடியாக ஆய்வு செய்து அங்கே என்னவெல்லாம் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திட வேண்டும், தமிழ்நாடு முதல மைச்சர் அவர்களின் ஆலோசனையின் பேரில் என்னென்னச் சிறப்புத் திட்டங்களை செயல்படுத்திவேண்டுமென்று தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். தமிழகத்தைப் பொறுத்தவரை 200க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்கள் இருக்கிறது என்றாலும், அதில் ஐந்தில் ஒரு பங்கு சுற்றுலாத்த லங்களை ஓரிரு மாதங்களிலேயே சுற்றிப் பார்த்து அதற்கான வளர்ச்சிக்கு வித்திட்டி ருப்பது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது.

நான் அவர்களிடத்திலே உங்களுடைய இலக்கு என்ன என்று கேட்ட போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையையும், துணை முதலமைச்சர் அவர்களின் பேரன்பையும் பெற்று தமிழ்நாட்டில் புதிய சுற்றுலாத் தலங்களை உருவாக்குவது என்று சொன்னார். உலக அளவில் சுற்றுலாவுக்கு ஒரு சிறந்த ஒன்றியம் என்றால், நம்முடைய இந்தியாவைச் சொல்வார்கள். இந்தியாவிலேயே அதிகமான சுற்றுலாப் பயணிகள் வரும் இடமாகவும் தமிழ்நாடு இருந்துக்கொண்டிருக்கிறது. சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட பல்வேறு நபர்களையும் பாராட்டுகிற வகையில், ஊக்கப்படுத்துகிற வகையில் ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அந்த வகையில்தான் சிறந்த சுற்றுலா முகவர், சுற்றுலா வழிகாட்டி, சுற்றுலாவை கவர்ந்திழுக்கிற வகையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஹோட்டல்கள், சுற்றுலாத்துறை வழிகாட்டிகள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட இருக்கிறது. சுற்றுலாத் துறை என்பது வேகமாக உல



கம் முழுவதும் வளர்ந்துக்கொண்டிருக்கிற துறை. உலக நாடுகளில் சுற்றுலாத்துறையின் எண்ணிக்கையும் உயர்ந்துக்கொண்டே சென்றுக்கொண்டிருக்கிறது. சுற்றுலா என்றாலே ஆன்மீக சுற்றுலாவை புறந்தள்ளிவிட்டுப் பார்க்க முடியாது. ஆன்மீக சுற்றுலாவைப் பொறுத்த வரை இந்தியாவில் முதல் இடத்தில் இருந்துகொண்டிருக்கிறது.

ஆகவேதான் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சுற்றுலாத் துறையும், மருத்துவத்துறையும் ஒரு கூட்டம் நடத்தி, உலகம் முழுவதும் மருத்துவச் சுற்றுலா வருகிறவர்களையும் ஈர்க்கிற வகையில் பல்வேறுத் திட்டங்களை வகுத்து செயல்படுத்தப்படுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மருத்துவம் பார்ப்பதற்கு 40க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து ஆசியா, ஐரோப்பா, போன்ற பல்வேறு நாடுகளிலிருந்து சென்னை மற்றும் கோவை போன்ற நகரங்களுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள்.

மருத்துவம் பார்ப்பதற்கும் தமிழ்நாட்டிற்கு பல்வேறு நாடுகளிலிருந்து வருகிறார்கள். ஆன்மீக சுற்றுலாவுக்கும் உலகத்தின் அனைத்து நாடுகளிலிருந்தும் வருகிறார்கள். அனைவருக்குமான அரசு என்கிற வகையில் திராவிட மாடல் அரசு மருத்துவத்துறையில் அற்புதமானத் திட்டத்தை அறிவித்திருக்கிறது.

அந்தத் திட்டம் இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 என்கிற திட்டமாகும். இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் அதிக விபத்துகள் நடக்கும் பகுதிகள் என்று 500 இடங்களைக் கண்டறிந்து, அந்த இடங்களைச் சுற்றி இருக்கிற 702 இடங்களைக் கண்டறிந்து, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் விபத்தில் சிக்கியவர்களுக்கு அரசின் சார்பில் ஒரு லட்சம் ரூபாய் தந்து அவர்களின் உயிர்களைக் காப்பாற்றுக்கிற மிகப்பெரிய திட்டத்தை 2021 டிசம்பர் திங்கள் 18ஆம் தேதி முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இந்தத் திட்டத்தால் பயன்பெறுபவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல. வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள், வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள். சுற்று லாவுக்காக வெளிநாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வருபவர்கள் சாலை விபத்துக்களில் சிக்குவார்க ளேயானால் முதல் 48 மணிநேரத்திற்கு ஒரு லட்சம் சிகிச்சைக்கு வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அறிவித்ததற்கேற்ப மூன்று லட்சத்து 15 ஆயிரம் பேர் அந்தத் திட்டத்தின் வாயிலாகப் பயன்பெற்றிருக்கிறார்கள். 20 சதவிகிதத்திற்கு மேலானவர்கள் வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் வந்த சுற்றுலாப் பயணிகள் பயன்பெற்றிருக்கிறார்கள். ஒரு லட்சம் ரூபாய் என்பது கடந்த மானியக் கோரிக்கையில் முதலமைச்சர் அவர்கள் இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்.

இப்படி பல்வேறுத் திட்டங்கள், ஆன்மீக சுற்றுலா வளர்ச்சி, மருத்துவத்துறையின் வளர்ச்சி பலத் துறைகளின் வளர்ச்சியின் காரணமாக தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை என்பது கூடிக் கொண்டே இருக்கிறது. கடந்த ஆண்டில் மட்டும் கிட்டத்தட்ட 29 கோடி பேர் தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்கள். அதில் 11 லட்சம் பேர் வெளிநாட்டவர் என்பது ஒரு மகிழ்ச்சியானச் செய்தி. சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு முதல்வர் அவர்கள் எடுக்கிற நடவடிக்கைகள்தான் காரணமாக இருந்துக் கொண்டிருக்கிறது.

இங்கே தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலான பழமையானக் கோயில்கள், சமணர்கள் வாழ்ந்த இடங்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கோட்டைகள் எல்லாம் தமிழ்நாட்டில் இருந்துக்கொண்டிருக்கிறது. அதேபோல் இப்படி கீழடி போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் மூலம் மிகப் பழமையான பண்பாட்டு நகரங்கள், அங்குக் கிடைக்கிறப் பொருட்களையெல்லாம் காட்சிப்படுத்தும் அருங்காட்சியகங்கள் பொருநையிலாக இருந்தாலும் சரி, கீழடியாக இருந்தாலும் சரி, முதலமைச்சர் அவர்களின் மிகச் சீரிய ஏற்பாட்டில் தமிழர்தம் பழம்பெருமை உலகிற்கு பறைச்சாற்றும் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அதனால்தான் உலகம் முழுவதும் இருக்கிற மக்கள் தமிழ்நாட்டைநோக்கிப் படையெடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இயற்கையை ரசிக்கும் சுற்றுலாத் தலங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற சுற்றுலாத் தலங்கள் அதிக அளவில் மக்களை ஈர்த்து வருகிறது. அதேபோல் தமிழ்நாட்டின் மூன்று பக்கங்களும் கடல்களால் சூழப்பட்டுள்ளது. ஏராளமான நதிகள் இருக்கிறது. நீர்த்தேக்கங்கள் இருக்கிறது. இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். Tamilnadu has great pottentional Tourism development and our duty to pottentional என்கிற வகையிலான மிகப்பெரிய வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்து வருகிறது.

எனவே நாம் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்க்கிற வகையில் பணியாற்றினால்தான் ஆண்டுதோறும் பல கோடி சுற்றுலாப் பயணிகளை நாம் ஈர்க்க முடியும். தமிழகத்திற்கு சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க முடியும். இதனால் தமிழ்நாட்டின் பொருளாதார நிலையும் வளர்ச்சி அடையும். மேற்கத்திய நாடுகளில் எப்படி சுற்றுலா வுக்கென்று எப்படி சில நாட்களை ஒதுக்குவர்களோ அதுபோன்றதொரு நிலை நம்மூரிலும் ஏற்பட்டு வருகிறது.

இன்று கொரோனாப் பேரிடருக்குப் பிறகு எந்த சுற்றுலா மையத்திற்கு போனாலும் அதிக அளவிலான பயணிகள் சுற்றுலா மையங்களை நாடிச் சென்றுக்கொண்டிருக்கிறார்கள். இதற்கான காரணம் என்பது வீடு, அலுவலகம் என்பதற்கு வேறுபாடு இல்லாமல் இருந்திருக்கிறது. கொரோனாவிற்குப் பிறகு வந்திருக்கிறது வீட்டிலிருந்தே வேலை பார்க்கும் முறை என்பது ஒரு சமநிலை இல்லை என்பதை ஆய்வுகள் சொல்லிக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் தீர்வாக என்ன சொல்கிறார்களென்றால் ஒரு குறிப்பிட்ட மாதம் வேலை பார்த்ததற்குப் பிறகு ஒரு சில நாட்களாவது எங்காவது சுற்றுலா சென்றுவிட்டு வர வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்போதுதான் மூளையும் சுறுசுறுப்பாகச் செயல்படும் என்று சொல்லப்படுகிறது.

கடந்த காலங்களில் எல்லோரும் உடல் உழைப்பு வேலைகளில்தான் ஈடுபட்டிருந்தார்கள். மாறிவரும் பணிச்சூழ்நிலைகள் மூளைக்கு அதிக வேலைக்கொடுக்கும் பணிகளில் நிறைய பேர் இருக்கிறார்கள். இதனால் உடல் பிரச்சினைகளும், மனஅழுத்தம் போன்ற மனரீதியிலானப் பிரச்சினைகளும் ஏற்படுகிறது. வேலைகளில் மட்டுமல்ல, மேற்படிப்புப் படிக்கும் ஆய்வாளர்கள், மாணவர்கள், எல்லோருமே நீண்ட நேரம் படித்துக்கொண்டிருப்பதால், மூளையை அதிக நேரம் பயன்படுத்திக்கொண்டே இருப்பதால், சோர்வும் ஏற்படுகிறது. இதிலெல்லாம் இருந்து தப்பிக்க நமது உடல் நலனையும், மன நலனையும் பாதுகாக்க சுற்றுலா செல்வது மிகப்பெரிய பயனளிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

சில நாட்களாவது மனதை புத்துணர்ச்சியாக வைத்துக்கொள்வது அவசியமானது, அத்தியாவசியமானது. எனவேதான் இனிவரும் காலங்களில் சுற்றுலாத்துறையின் தேவை என்பது அதிகமான அளவுக்கு அதிகரிக்கும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி தமிழ்நாடு சுற்றுலாத் துறை மிகச் சிறப்பானப் பணிகளைச் செய்துக்கொண்டிருக்கிறது. விருதுகள் பெறுவதற்கு வருகை தந்திருக்கிற திருச்சி மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட உங்கள் அனைவரையும் வாழ்த்தி, வணங்கி வரவேற்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் உரையாற்றினார்.

---

## தஞ்சையில் 71 வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

# ரூ.22.88 கோடி மதிப்பில் கடனுதவிகள்!

## உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்!

*சென்னை, நவ. 21 -* தஞ்சாவூர் மாவட்டத்தில் 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 2086 பயனாளிகளுக்கு ரூ.22 கோடியே 88 இலட்சம் மதிப்பில் பல்வேறு கடனுதவிகளை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்.

தஞ்சாவூர் மாநகராட்சி பேறறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் முன்னிலையில் நேற்று முந்தினம் (19.11.2024) நடைபெற்றது.

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்று வருகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் 340 கூட்டுறவு நிறுவனங்கள் (2 மத்திய கூட்டுறவு வங்கிகள், 243 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 6 நகர கூட்டுறவு வங்கிகள், 1 நகர கூட்டுறவு கடன் சங்கம், 53 பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள், 8 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 5 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள், 2 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 9 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள், 1 கூட்டுறவு அச்சகம், 1 கூட்டுறவு ஒன்றியம் மற்றும் 9 மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள்) என மொத்தம் தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கீழ் 340 கூட்டுறவு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் செயல்படும் தொடக்க வகை கூட்டுறவு சங்கங்கள் முதல் மாவட்ட மற்றும் மாநில அளவிலான 22,000 க்கும் மேற்பட்ட கூட்டுறவு சங்கங்கள் அனைத்து வகை மக்களும் எளிதில் அணுகும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை புகுத்தி சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வு” என்ற எண்ணத்தை ஈடேற செய்து வருகிறது கூட்டுறவு இயக்கம். மனிதர்கள் மனிதர்களாக மதிக்கப்பட்டு மனித இனத்துக்கே முக்கிய த்துவம் கொடுக்கும் ஒரு மகத்தான மக்கள் இயக்கமாகிய கூட்டுறவு இயக்கத்தில் இணைந்துள்ளோர் நன்மைகளையும் கூட்டுறவு இயக்கம் ஏற்படுத்தியுள்ள சாதனைகளையும் கூட்டுறவு சங்கங்கள் ஆற்றி வருகின்ற பணிகளையும் மக்கள் மன்றத்தில் எடுத்துரைத்து மக்கள் அனைவரும் கூட்டுறவில் இணைந்து பயன்பெற வேண்டும் என்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு வார விழா கொண்டாடப்படுகிறது.

ஆண்டுதோறும் முன்னாள் பாரத பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் திங்கள் 14ஆம் தேதி முதல் 20ஆம் தேதி வரை நாடு முழுவதும் புதுடில்லியில் உள்ள தேசிய கூட்டுறவு ஒன்றியத்தின் வழிகாட்டுதலின் படி கூட்டுறவு வார விழா கொண்டாடப்படுகிறது.

மேலும் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விழாக்களில் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் நற்பயன்கள் தெரியப்படுத்தப்படுகின்றன. அதுமட்டுமின்றி இரத்ததான முகாம் மரக்கன்றுகள் நடுதல் பள்ளி / கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி நடத்துவது கூட்டுறவா ளர்கள் கௌரவித்தல் உள்ளிட்ட பலதரப்பட்ட நலத்திட்ட பணிகள் மற்றும் நிகழ்ச்சிகளை அனைத்து வகை கூட்டு அமைப்புகள் ஒருங்கிணைந்து நடத்துவதன் மூலம் தமிழ்நாட்டில் கூட்டுறவு அமைப்புகள் மிகவும் சிறப்பாக செயல்பட ஊக்குவிக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பயிர்கடன் தள்ளுபடி திட்டம் 2021 கீழ் தமிழ்நாடு மாநிலத்தில் 16,43,347 விவசாயிகள் பெற்ற ரூ.12 ஆயிரத்து 489 கோடி தொகைக்கான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 66,912 விவசாயிகள் பெற்ற ரூ.484 கோடியே 40 இலட்சம் தொகைக்கான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

நகைக்கடன் தள்ளுபடி திட்டம் 2021 கீழ் தமிழ்நாடு மாநிலத்தில் 14இலட்சத்து 52 ஆயிரம் ஏழை எளிய மக்கள் வாங்கிய ரூ.5 ஆயிரத்து 13 கோடி தொகைக்கான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 42,096 கடன்களுக்கான ரூ.130 கோடியே 5 இலட்சம் தொகைக்கான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவிக்குழு கடன் தள்ளுபடி 2021 திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநிலத்தில் 1இலட்சத்து 17 ஆயிரத்து 617 மகளிர் சுய உதவிக்குழுக்கள் வாங்கிய ரூ.2 ஆயிரத்து 756 கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 15 இலட்சத்து 88 ஆயிரத்து 309 மகளிர் பயனடைந்தனர். அதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் 5290 சுய உதவிக்குழுக்களின் 51,345 உறுப்பினர்களுக்கான கடன் தொகை ரூ.78.56 கோடி தள்ளுபடி செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பெற்றனர் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர்.கோவி.செழியன் தெரிவித்தார்கள்.

முன்னதாக 71-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 69 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 425 பயனாளிகளுக்கு ரூ.451.55 இலட்சம் கடனுதவி தொகையும், நாட்டுப்புற கலைஞர் கடன் திட்டத்தின் கீழ் 4 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சம் கடனுதவி தொகையும், சிறுவணிக கடன் திட்டத்தின் கீழ் 21 பயனாளிகளுக்கு ரூ.11.75 இலட்சம் கடனுதவி தொகையும், டாப்செட்கோ மூலம் 1 பயனாளிக்கு ரூ.50 ஆயிரம் கடனுதவி தொகையும், பணிபுரியும் மகளிர் கடனுதவி திட்டத்தின் கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.10.50 இலட்சம் கடனுதவி தொகையும், சிறுகுறு தொழில்கடன் கடன் திட்டத்தின் கீழ் 9 பயனாளிகளுக்கு ரூ.8.00 இலட்சம் கடனுதவி தொகையும், பயிர்/கால்நடை/நகைக்கடன் திட்டத்தின் கீழ் 2318 பயனாளிகளுக்கு ரூ.1788.85 இலட்சம் கடனுதவி தொகையும், கைம்பெண்கள் கடன் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு ரூ.3.90 இலட்சம் கடனுதவி தொகையும், மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.98 ஆயிரம் கடனுதவி தொகையும், மாற்றுத்திறனாளிக் கடன் திட்டத்தின் கீழ் 7 பயனாளிகளுக்கு ரூ.4.41 இலட்சம் கடனுதவி தொகையும், மத்திய கால விவசாய கடன் திட்டத்தின் கீழ் 3 பயனாளிகளுக்கு ரூ.4.72 இலட்சம் கடனுதவி தொகையும், பண்ணை சாராக் கடன் திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.96 ஆயிரம் கடனுதவி தொகையும், என 2806 பயனாளிகளுக்கு ரூ.2288.12 இலட்சம் கடனுதவிக்கான காசோலைகளை உயர்கல்வித் துறை அமைச்சர் வழங்கினார்கள்.

தொடர்ந்து, அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றிப் பெற்ற அரசு மாணாக்கர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளும், சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு கேடயங்களும் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, மாநிலங்களவை உறுப்பினர் சு. கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.ஆர். சுதா, திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன், மாநகராட்சி மேயர்கள் சண். இராமநாதன் (தஞ்சாவூர்), க.சரவணன் (கும்பகோணம்), உதவி ஆட்சியர் (பயிற்சி) உத்கர்ஷ் குமார், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் சி.தமிழ் நங்கை, மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் த.பிரபு (தஞ்சாவூர்), சு. முத்துக்குமார் (கும்பகோணம்), முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். ராமச்சந்திரன், சதய விழா குழு தலைவர் து.செல்வம், மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.ஆர். உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர்கள் மரு. அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), சு.ப.தமிழழகன் (கும்பகோணம்), ஒன்றிய குழுத் தலைவர்கள் கல்லணை செல்லக்கண்ணு (பூதலூர்), கலைச்செல்வன் (அம்மாபேட்டை), திருமதி.சுபாதிருநாவுக்கரசு (திருவிடைமருதூர்), திருமதி. பார்வதிசிவசங்கர் (ஒரத்தநாடு), பழநிவேல் (பட்டுக்கோட்டை), திருமதி.சுமதி கண்ணதாசன் (பாபநாசம்), பட்டுகோட்டை நகர மன்றத் தலைவர் திருமதி. சண்முகபிரியா, தஞ்சாவூர் ஒன்றிய துணைத் தலைவர் அருளானந்தசாமி, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி துணைப் பதிவாளர் / முதன்மை வருவாய் அலுவலர் செல்வி. ஆர். பிரியதர்ஷினி , தஞ்சாவூர் இணைப்பதிவாளர் அலுவலகம் துணைப் பதிவாளர் / பணியாளர் அலுவலர் சௌ. அப்துல்மஜீத், துணைப் பதிவாளர்கள் சுகி.சுவாமிநாதன் (பட்டுக்கோட்டை சரகம்), க.பாலமுருகன் (கும்பகோணம் சரகம்), கும்ப கோணம் துணைப் பதிவாளர் /செயலாட்சியர் CCWS ஆர்.பழனியப்பன் , பொதுவிநியோக திட்ட துணைப் பதிவாளர் செல்வி.ஆ.சு.லேகா, தஞ்சாவூர் துணைப் பதிவாளர் / செயலாட்சியர் TCWS திருமதி.ஆ.கேத்ரின், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி துணைப் பதிவாளர் / முதன்மை வருவாய் அலுவலர் ஆர்.கருணாகரன் , செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் , மத்திய கூட்டுறவு வங்கி பொது மேலாளர்கள் திருமதி.என்.அக்கினி அம்மாள் (தஞ்சாவூர்), திருமதி.ச. இளையராணி (கும்பகோணம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், படியூர் ஊராட்சி, இந்திரா நகரில் திறந்த வெளி கிணற்றில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப் பட்டுள்ளதை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தம், நகர துணை செயலாளர் சுப்பு (எ) சுப்பிரமணி, ஊராட்சி மன்றத் தலைவர் ஜீவிதா சண்முகசுந்தரம், அமைப்புசாரா ஓட்டுநர் அணி மாவட்ட அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் உள்பட பலர் உள்ளனர்.